மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.67/2021</u>

2026ம் ஆண்டு ஜனவரி 20ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாப்பாத்தி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>20.01.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 08.06.1995 தேதியில் திருமணம் நடைபெற்றது. எனக்கு மேற்படி தேதியில் திருமணம் நடைபெற்றது என்பதை காண்பிப்பதற்காக என்னுடைய திருமண பதிவு சான்றிதழையோ அல்லது வேறு ஆவணத்தையோ திருமண பத்திரிகையையோ நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது திருமணம் எந்த முறைப்படி நடந்தது என்றால் இந்து திருமண முறைப்படி நடந்தது எனக்கு திருமணம் நடந்த போது எனது வயது என்னவென்றால் 31 வயது. சாமித்துரைக்கு திருமண சமயத்தில் என்ன வயது என்றால் 45 வயது இருக்கும். சாமிதுரை எந்த மதத்தை சேர்ந்தவர் என்றால் இந்து மதத்தைச் சேர்ந்தவர். சாமிதுரை கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர் என்றும், நான் வழக்கிற்காக தவறாக அவர் இந்து மதத்தை சேர்ந்தவர் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமான புகைப்படத்தில் உள்ள ஆண் நபர் சாமிதுரை என்றால் சரிதான்.

3. சாமிதுரை என்பவருக்கும் இந்த வழக்கின் 1ம் வாதி ஜோன் எமிலியா என்பவருக்கும் கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர் CSI யூனியன் சர்ச்சில் கிறிஸ்துவ முறைப்படி 15.02.1984 ஆம் தேதி திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை எங்கள் திருமணத்தை நாங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 10 பேர் ஊர் பெரியவர்களை வைத்து திருமணம் செய்து கொண்டோம். சாமி துரையின் தகப்பனார் பெயர் கனகராஜ்.

4. தாயார் பெயர் பொன்னம்மாள். சாமிதுரையுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஐந்து நபர்கள். மூத்தவர் பெயர் ராஜகுமாரி, இரண்டாவது நபர் சாமிதுரை, மூன்றாவது நபர் தனசேகரன், நாலாவது நபர் செல்வராணி, ஐந்தாம் நபர் கலைச்செல்வன். எங்கள் திருமணம் நடந்ததாக சொல்லும் 08.06.1995 தேதியில் அதில் சாமி துறையின் பெற்றோர்கள் கலந்து கொண்டார்களா என்றால் எங்கள் திருமண சமயத்தில் சாமி துரையின் அப்பா உயிருடன் இல்லை. அம்மா உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தார் அதனால் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

5. உண்மையிலேயே சாமிதுரை என்னை திருமணம் செய்து இருந்தால் அவரது பெற்றோர்கள் வந்து கலந்து கொண்டிருப்பார்கள் என்றும் திருமணம் செய்து கொள்ளாததால் தான் அவர்கள் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். சங்கவி என்பவர் நான் தத்து எடுத்து வளர்க்கும் குழந்தை. அது சம்பந்தமாக நான் இந்த வழக்கில் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

6. நான் தாக்கல் செய்துள்ள எனது ஆதார் அட்டை மற்றும் சாமி துரையின் இறப்பு சான்றிதழ், சாமி துரையின் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை நான்

சாமித்துரைக்கு முதல் மனைவி உள்ள உண்மையை மறைத்து தவறான தகவல்களை கொடுத்து என்னால் பெறப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கவை அல்ல என்றும் சொன்னால் சரியல்ல சாமிதுரை தனது பணி பதிவேட்டில் தனது முதல் மனைவியான ஒன்னாம் மனைவியின் பெயரை தான் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு AIG அலுவலகத்தில் இருந்து கடந்த 14.10.2019 ஆம் தேதி சாமித்துறைக்கு முதல் மனைவி இருந்தால் அவருடைய இறப்பு சான்றிதழையோ அல்லது விவாகரத்து நடைபெற்று இருந்தால் அது குறித்த ஆவணங்களையோ கொடுக்குமாறு சொல்லி கடிதம் வந்ததா என்றால் எனக்கு அவ்வாறு எதுவும் வரவில்லை.

7. நான் சொல்வது உண்மை அல்ல என்றும் எனக்கு AIG அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்தது என்றும், அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலாததால் கடிதம் எதுவும் வரவில்லை என்று இந்த வழக்கில் நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள 1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் உண்மையை மறைத்து தவறான தகவல்களை கொடுத்து பெறப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கவை அல்ல என்று சொன்னால் சரியல்ல.

8. சாமித்துறைக்கு 1ம் வாதி தான் சட்டப்படியான முதல் மனைவி என்றும் நான் சாமிதுரை என்பவருக்கு சட்டப்படியான மனைவி அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. சாமிதுரை இங்கு தனியாகத்தான் வாழ்ந்து வந்தார் என்றும் விடுமுறைக்கு கோயம்புத்தூர் சென்று 1ம் வாதியுடன் சேர்ந்து வாழ்ந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. சாமிதுரை இறப்பிற்கு வாதிகள் வந்து உறவினர்களுடன் கலந்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. யாரும் வரவில்லை முதல் மனைவி உடன் விவாகரத்து எதுவும்

நடைபெறாத நிலையில் நான் சாமி துறையை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியபடி இந்த வழக்கு தீர்ப்பாக தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாரிசு சான்றிதழ் வழங்கும் சமயத்தில் என்னை முறையாக விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். விசாரணை செய்த போது எனது தரப்பில் ஆவணங்கள் கொடுத்திருந்தேனா என்றால் ஆமாம். ஆவணங்கள் பரிசீலனை செய்து என்னை விசாரணை செய்து முறையாகத்தான் வாரிசு சான்றிதழ் வழங்கினார்கள் என்றால் ஆமாம்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.20 18:30:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்